O.S.232-2023

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், புதுக்கோட்டை**

**அ.வ.எண்.232/2023**

வாதி தரப்பு 1வது சாட்சி ராஜரெத்தினம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. அனுராதா, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சொன்ன சாட்சியத்தை அவர் சாட்சி கூண்டிலிருந்து பார்த்து தெரிந்துகொள்ளும் வண்ணம் அவருக்கு முன்பு கணினி வைக்கப்பட்டிருந்தது. அதை பார்த்து சாட்சி ஒப்புக்கொண்டு, சாட்சியம் அளித்தார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜரெத்தினம் | வயது | : | 76/2025 |
| தகப்பனார் பெயர் | : | குமரப்பன் | தாலுகா | : | கறம்பக்குடி |
| கிராமம் | : | கறம்பக்குடி | தொழில் | : | தலைமை ஆசிரியர் (பணி ஓய்வு) |

நாள்-12.09.2025

வா.சா.1

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதியாவேன். நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். நான் படித்து பார்த்து கையெழுத்துக்கள் போட்டேன். அதில் உள்ள விசயங்கள் உண்மையானது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களை குறியீடு செய்கிறேன். எனவே பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.